# ॐ

# माण्डूक्योपनिषद्
## மாண்டூ₃க்யோபநிஷத்₃

### ஸாரம்

அதர்வண வேதத்தில் அமைந்துள்ள இவ்வுபநிஷத் ஓங்காரத்தின் துணைகொண்டும் ஜீவன் அனுபவிக்கின்ற மூன்று அவஸ்தைகளின் துணைகொண்டும் ஆத்ம தத்துவத்தை விளக்குகிறது.

ஓம் என்கின்ற எழுத்தே இவை அனைத்தும் என்று கூறப்பட்டு ஓங்காரத்தைப் பற்றிய விசாரம் செய்யப்பட இருக்கின்றது என்று உறுதிமொழி அளிக்கப்படுகிறது (1). இவை அனைத்தும் ப்ரஹ்மன் என்று கூறப்பட்டு, இந்த ஆத்மாவே ப்ரஹ்மன் என்கின்ற மஹா வாக்யத்துடன் ஆத்மவிசாரம் ஆரம்பமாகிறது (2). ஆத்மா நான்கு பாதங்களாக அதாவது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முறையாக விளக்கப்படுகிறது. ஆத்மா, ஸ்தூல சரீரத்துடன் அபிமானம் வைக்கும்பொழுது விச்வன் என்ற பெயரைப் பெற்று வெளிஉலகத்தை அனுபவித்து விழிப்பு நிலையை அடைகிறது. இது ஆத்மாவின் முதல் பாதம் (3). அதே ஆத்மாவானது ஸூக்ஷ்மசரீரத்தை மட்டும் அபிமானிக்கும் பொழுது ஸூக்ஷ்ம மான பொருள்களை அனுபவித்துக் கனவு நிலையை அடைகிறது. அப்பொழுது ஆத்மாவுக்கு தைஜசன் என்ற பெயர் அமைகிறது. இது ஆத்மாவின் இரண்டாவது பாதம் (4). அதே ஆத்மாவானது காரணசரீரத்தை மட்டும் அபிமானிக்கும் பொழுது எந்தப் பொருள்களையும் அனுபவிக்காமல் அறியாமையையும் சுகத்தையும் மட்டும் அனுபவிக்கிறது. அப்பொழுது ஆத்மாவுக்கு ப்ராஞன் என்ற பெயர் அமைகிறது. இது ஆத்மாவின் மூன்றாவது பாதம் (5). இவ்விதம் ஆத்ம தத்துவத்தில் மூன்று உடல்களும் அதன் விளைவாக வரும் மூன்று அவஸ்தைகளும் ஏற்றி வைக்கப்பட்ட பின், இவ்வனைத்து உலகமும் அதே ஆத்மாவில் ஏற்றி வைக்கப்படும்பொழுது ஈச்வரன் என்ற தத்துவம்

வெளிப்படுகிறது. அந்த ஈச்வரன், அனைத்தையும் அறிபவராகவும் அனைத்துக்கும் உபாதான காரணமாகவும் நிமித்த காரண மாகவும் விளங்குகிறார் (6).

ஆத்மாவின் மூன்று பாதங்கள் கூறப்பட்ட பின் நான்காவது பாதம் என்ன என்ற எதிர்பார்ப்பு வரும்பொழுது அப்பாதம் ஏழாவது மந்த்ரத்தில் விளக்கப்படுகிறது. நான்காவது என்பது ஸம்ஸ்க்ருதத்தில் துரீயம் என்று அழைக்கப்படுகின்றது. ஆத்மாவின் நான்காவது பாதம் ஓர் அவஸ்தை அல்ல. எந்த ஓர் அனாத்மாவுடனும் சம்பந்தப்பட்டதல்ல. அறிவு ஸ்வரூபமான எந்த ஓர் ஆத்மா மூன்று அவஸ்தைகளிலும் மாறாது ஒன்றாகவே இருந்து கொண்டி ருக்கிறதோ அந்த ஆத்மா, துரீயம் என்று அழைக்கப்படுகிறது. அந்த ஆத்மா விச்வன் அல்ல. ஆனால் அந்த ஆத்மாவைச் சார்ந்து விச்வன் இருக்கிறான். தூய ஆத்மாவுக்கு விச்வன், தைஜஸன், ப்ராஞன் என்ற தன்மைகள் பொய்யான சரீர நிமித்தமாக வந்துள்ளன. ஆகவே, ஆத்மாவின் துரீய ஸ்வரூபம் ஸத்யமாகவும், முதல் மூன்று அம்சங்கள் மித்யாவாகவும் இருக்கின்றன. அந்த துரீய ஆத்ம ஸ்வரூபம் விரிவாக விளக்கப்படுகின்றது (7).

ஓம் என்ற எழுத்து நான்கு அம்சங்களாகப் பிரிக்கப்படுகிறது. அதில் சப்த ரூபமாக மூன்று அம்சங்களும், சப்தமற்றதாக ஓர் அம்சமும் உள்ளன. சப்த ரூபமான மூன்று அம்சங்கள் முறையே அகாரம், உகாரம், மகாரம் அதாவது அ, உ, ம என்ற எழுத்துக்கள். இதில் இந்த மூன்று எழுத்துக்களும் முதல் மூன்று அவஸ்தைகளுடன் சேர்க்கப்படுகின்றன (8). ஆத்மாவின் முதல் பாதம் ஓங்காரத்தின் அகாரமாகவும் இரண்டாவது பாதம் உகார மாகவும் மூன்றாவது பாதம் மகாரமாகவும் இணைக்கப்படுகின்றன (9 – 11). ஓங்காரத்தின் சப்தமற்ற பாதம் துரீயத்துடன் இணைக்கப் படுகிறது. துரீயத்தின் இலக்கணம் மீண்டும் கூறப்படுகிறது (12).

## शान्तिपाठः

சா$_1$ந்திபாட$_2$:

**भद्रं कर्णेभिः श्रृणुयाम देवाः। भद्रं पश्येमाक्षभिर्यजत्राः। स्थिरैरङ्गैस्तुष्टुवाँसस्तनूभिः। व्यशेम देवहितं यदायुः। स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः। स्वस्ति नः पूषा विश्ववेदाः। स्वस्ति नस्ताक्ष्र्यो अरिष्टनेमिः। स्वस्ति नो बृहस्पतिर्दधातु। ओं शान्तिः शान्तिः शान्तिः।।**

ப$_4$த்$_3$ரம் கர்ணேபி$_4$: ச்$_1$ருணுயாம தே$_3$வா: । ப$_4$த்$_3$ரம் பச்$_1$யேமாக்ஷபி$_4$ர்யஜத்ரா: । ஸ்தி$_2$ரைரங்கை$_3$ஸ்துஷ்டு வாம்ஸஸ்தனூபி$_4$: । வ்யசே$_1$ம தே$_3$வஹிதம் யதா$_3$யு: । ஸ்வஸ்தி ந இந்த்$_3$ரோ வ்ருத்$_3$த$_4$ச்$_1$ரவா: । ஸ்வஸ்தி ந: பூஷா விச்$_1$வவேதா$_3$: । ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டனேமி: । ஸ்வஸ்தி நோ ப்$_3$ருஹஸ்பதிர் த$_3$தா$_4$து । ஓம் சா$_1$ந்தி: சா$_1$ந்தி: சா$_1$ந்தி: ।।

**देवाः** தே$_3$வா: தேவர்களே **कर्णेभिः** கர்ணேபி$_4$: செவிகளால் **भद्रं** ப$_4$த்$_3$ரம் நல்லதை **श्रृणुयाम** ச்$_1$ருணுயாம கேட்போமாக. **यजत्राः** யஜத்ரா: வணக்கத்திற்குரிய தேவர்களே **अक्षभिः** அக்ஷபி$_4$: கண்களால் **भद्रं** ப$_4$த்$_3$ரம் நல்லதை **पश्येम** பச்$_1$யேம பார்ப்போமாக. **स्थिरैः अङ्गैः** ஸ்தி$_2$ரை: அங்கை$_3$: உறுதியான உறுப்புக்களுடன் **तनूभिः** தனூபி$_4$: வேதங்களால் (உங்களை நாங்கள்) **तुष्टुवांसः** துஷ்டுவாம்ஸ: புகழ்ந்துகொண்டு **यद् आयुः** யத்$_3$ ஆயு: எவ்வளவு ஆயுள் **देवहितं** தே$_3$வஹிதம் இறைவனால் (எங்களுக்கு) கொடுக்கப்பட்டுள்ளதோ (அதை) **व्यशेम** வ்யசே$_1$ம அனுபவிப்போமாக. **वृद्धश्रवाः** வ்ருத்$_3$த$_4$ச்$_1$ரவா: ஓங்கிய புகழையடைந்த **इन्द्रः** இந்த்$_3$ர: இந்த்ரன் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **विश्ववेदाः** விச்$_1$வவேதா$_3$: அனைத்தையும் அறிகின்ற **पूषा** பூஷா ஸூர்யதேவர் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்).

**अरिष्टनेमिः** அரிஷ்டனேமி: தடையின்றிச்செல்லும் **तार्क्ष्यः** தார்க்ஷ்ய: கருடதேவர் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **बृहस्पतिः** ப்$_3$ருஹஸ்பதி: (பேரறிவுடைய) ப்ருஹஸ்பதி **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை **दधातु** த$_3$தா$_4$து அருளட்டும். **ओं शान्तिः** ஓம் சா$_1$ந்தி: ஓம் சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி.

தேவர்களே, செவிகளால் நல்லதைக் கேட்போமாக. வணக்கத்திற்குரிய தேவர்களே, கண்களால் நல்லதைப் பார்ப்போமாக. உறுதியான உறுப்புக்களுடன் வேதங்களால் உங்களை நாங்கள் புகழ்ந்துகொண்டு எவ்வளவு ஆயுள் இறைவனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதோ அதை அனுபவிப்போமாக. ஓங்கிய புகழையடைந்த இந்த்ரன் எங்களுக்கு நன்மையை அருளட்டும். அனைத்தையும் அறிகின்ற ஸூர்யதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். தடையின்றிச் செல்லும் கருடதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். பேரறிவுடைய ப்ருஹஸ்பதி எங்களுக்கு நன்மையை அருளட்டும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

**१. ओमित्येतदक्षरमिदँसर्वं तस्योपव्याख्यानं भूतं भवद्भविष्यदिति सर्वमोङ्कार एव। यच्चान्यत् त्रिकालातीतं तदप्योङ्कार एव॥**

1. ஓமித்யேதத$_3$க்ஷரமித$_3$ம்ஸர்வம் தஸ்யோபவ்யாக்$_2$யானம் பூ$_4$தம் ப$_4$வத்$_3$ப$_4$விஷ்யதி$_3$தி ஸர்வமோங்கார ஏவ । யச்சாந்யத் த்ரிகாலாதீதம் தத$_3$ப்யோங்கார ஏவ ॥

**ओं** ஓம் ஓம் **इति** இதி என்கின்ற **एतत् अक्षरं** ஏதத் அக்ஷரம் இந்த எழுத்து **इदं सर्वं** இத$_3$ம் ஸர்வம் இவை அனைத்துமாக உள்ளது. **तस्य** தஸ்ய அதனுடைய (ஓங்காரத்தின்) **उपव्याख्यानं** உபவ்யாக்$_2$யானம் முழுமையான தெளிவான விளக்கம் (இப்பொழுது ஆரம்பிக்கப் படுகிறது). **भूतं** பூ$_4$தம் கடந்தது **भवत्** ப$_4$வத் இருப்பது

**भविष्यत्** ப₄விஷ்யத் வரப்போவது **इति सर्वं** இதி ஸர்வம் ஆகிய அனைத்தும் **ओंकारः एव** ஓங்கார: ஏவ ஓங்காரம் தான். **यत् च अन्यत्** யத் ச அன்யத் எந்த ஒன்று **त्रिकालातीतं** த்ரிகாலாதீதம் மூன்று காலத்தையும் கடந்துள்ளதோ **तत् अपि** தத் அபி அதுவும் **ओंकारः एव** ஓங்கார: ஏவ ஓங்காரமே.

ஓம் என்கின்ற இந்த எழுத்து இவை அனைத்துமாக உள்ளது. ஓங்காரத்தின் முழுமையான, தெளிவான விளக்கம் இப்பொழுது ஆரம்பிக்கப்படுகிறது. கடந்தது, இருப்பது, வரப்போவது ஆகிய அனைத்தும் ஓங்காரம்தான். எந்த ஒன்று மூன்று காலத்தையும் கடந்துள்ளதோ, அதுவும் ஓங்காரமே.

மூன்று காலத்தைக் கடந்துள்ளது என்பது இங்கு மாயா தத்துவத்தைக் குறிக்கிறது. தோன்றிய உலகமும் அதற்குக் காரணமான மாயையும் ஓங்காரத்தின் அகார-உகார-மகார ஸ்வரூபம். ஓங்காரத்தின் மற்றொரு அம்சமான அசப்தஸ்வரூபம் துரீய ஆத்மாவாகும். இந்த ஓங்கார விசாரம் எட்டாவது மந்த்ரத்தி ருந்து பன்னிரண்டாவது மந்த்ரம் வரை செய்யப்படும்.

## २. सर्वं ह्येतद् ब्रह्म अयमात्मा ब्रह्म सोऽयमात्मा चतुष्पात् ॥

2. ஸர்வம்ஹ்யேதத்₃ ப்₃ரஹ்ம அயமாத்மா ப்₃ரஹ்ம
ஸோऽயமாத்மா சதுஷ்பாத் ॥

**एतत्** ஏதத் இவை **सर्वं** ஸர்வம் அனைத்தும் **ब्रह्म हि** ப்₃ரஹ்ம ஹி ப்ரஹ்மனே. **अयं** அயம் இந்த **आत्मा** ஆத்மா ஆத்மா **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மன். **सः** ஸ: அந்த (ப்ரஹ்மனான) **अयं** அயம் இந்த **आत्मा** ஆத்மா ஆத்மா **चतुष्पात्** சதுஷ்பாத் நான்கு பாதங்களை உடையது.

இவை அனைத்தும் ப்ரஹ்மனே. இந்த ஆத்மா ப்ரஹ்மன். அந்த ப்ரஹ்மனான இந்த ஆத்மா நான்கு பாதங்களை உடையது.

இங்கு ஆரம்பம் ஆகின்ற ஆத்மவிசாரம் ஏழாவது மந்த்ரத்தில் முடிவுறும். ஆத்மவிசாரம் என்பது நான் என்ற சொல் ன் உண்மையான பொருளைக் கண்டறிய மேற்கொள்ளப்படும் முயற்சி.

३. जागरितस्थानो बहिष्प्रज्ञः सप्ताङ्ग एकोनविंशतिमुखः स्थूलभुग् वैश्वानरः प्रथमः पादः ।।

3. ஜாக3ரிதஸ்தா2னோ ப3ஹிஷ்ப்ரஞ: ஸப்தாங்க3 ஏகோன விம்ச1திமுக2: ஸ்தூ2லபு4க்3 வைச்1வாநர: ப்ரத2ம: பாத3: ।।

**जागरितस्थानः** ஜாக3ரிதஸ்தா2ன: விழிப்பு நிலையை உடைய **बहिष्प्रज्ञः** ப3ஹிஷ்ப்ரஞ: வெளிவிஷயங்களை அறிகின்ற **सप्ताङ्गः** ஸப்தாங்க3: ஏழு அங்கங்களை உடைய **एकोनविंशतिमुखः** ஏகோனவிம்ச1திமுக2: பத்தொன்பது வாய்களை உடைய **स्थूलभुक्** ஸ்தூ2லபு4க் ஸ்தூல விஷயங்களை அனுபவிக்கின்ற **वैश्वानरः** வைச்1வாநர: வைச்வாநரன் **प्रथमः** ப்ரத2ம: முதல் **पादः** பாத3: பாதம்.

விழிப்பு நிலையை உடைய, வெளிவிஷயங்களை அறிகின்ற, ஏழு அங்கங்களை உடைய, பத்தொன்பது வாய்களை உடைய, ஸ்தூல விஷயங்களை அனுபவிக்கின்ற வைச்வாநரன் முதல் பாதம்.

४. स्वप्नस्थानोऽन्तःप्रज्ञः सप्ताङ्ग एकोनविंशतिमुखः प्रविविक्तभुक् तैजसो द्वितीयः पादः ।।

4. ஸ்வப்னஸ்தா2னோऽந்த:ப்ரஞ: ஸப்தாங்க3 ஏகோனவிம்ச1தி முக2: ப்ரவிவிக்தபு4க் தைஜஸோ த்3விதீய: பாத3: ।।

**स्वप्नस्थानः** ஸ்வப்னஸ்தா2ன: கனவு நிலையை உடைய **अन्तःप्रज्ञः** அந்த:ப்ரஞ: உள்விஷயங்களை அறிகின்ற **सप्ताङ्गः** ஸப்தாங்க3: ஏழு அங்கங்களை உடைய **एकोनविंशतिमुखः** ஏகோனவிம்ச1திமுக2: பத்தொன்பது வாய்களை உடைய **प्रविविक्तभुक्** ப்ரவிவிக்தபு4க் ஸூக்ஷ்ம விஷயங்களை அனுபவிக்கின்ற **तैजसः** தைஜஸ: தைஜஸன் **द्वितीयः** த்3விதீய: இரண்டாவது **पादः** பாத3: பாதம்.

கனவு நிலையை உடைய, உள்விஷயங்களை அறிகின்ற, ஏழு அங்கங்களை உடைய, பத்தொன்பது வாய்களை உடைய, ஸூக்ஷ்ம விஷயங்களை அனுபவிக்கின்ற தைஜஸன் இரண்டாவது பாதம்.

**५. यत्र सुप्तो न कञ्चन कामं कामयते न कञ्चन स्वप्नं पश्यति तत्सुषुप्तम्। सुषुप्तस्थान एकीभूतः प्रज्ञानघन एवानन्दमयो ह्यानन्दभुक् चेतोमुखः प्राज्ञस्तृतीयः पादः ।।**

5. யத்ர ஸுப்தோ ந கஞ்சன காமம் காமயதே ந கஞ்சன ஸ்வப்னம் பச்$_1$யதி தத்ஸுஷுப்தம்। ஸுஷுப்தஸ்தா$_2$ன ஏகீபூ$_4$த: ப்ரஞானக$_4$ன ஏவானந்த$_3$மயோ ஹ்யானந்த$_3$பு$_4$க் சேதோமுக$_2$: ப்ராஞஸ்த்ருதீய: பாத$_3$: ।।

**यत्र** யத்ர எந்த நிலையில் இருக்கும்போது **सुप्तः** ஸுப்த: (ஒருவன் தன்னை) அறியாதவனாக இருக்கிறானோ **कञ्चन** கஞ்சன எந்த **कामं** காமம் பொருளையும் **न कामयते** ந காமயதே ஆசைப்படுவதில்லையோ **कञ्चन** கஞ்சன எந்த **स्वप्नं** ஸ்வப்னம் கனவையும் **न पश्यति** ந பச்$_1$யதி பார்ப்பதில்லையோ **तत्** தத் அது **सुषुप्तं** ஸுஷுப்தம் உறக்கநிலை. **सुषुप्तस्थानः** ஸுஷுப்தஸ்தா$_2$ன: உறக்கநிலையை உடைய **एकीभूतः** ஏகீபூ$_4$த: ஒன்றாக இருக்கின்ற **प्रज्ञानघनः एव** ப்ரஞானக$_4$ன: ஏவ விதவிதமான அறிவின்றி வெறும் அறிவின் குவியலாக மட்டும் உள்ள **आनन्दमयः** ஆனந்த$_3$மய: ஆனந்தமயமான **आनन्दभुक् हि** ஆனந்த$_3$பு$_4$க் ஹி ஆனந்தத்தை அனுபவிக்கின்ற **चेतोमुखः** சேதோமுக$_2$: விழிப்புக்கும் கனவுக்கும் வழியாக இருக்கின்ற **प्राज्ञः** ப்ராஞ: ப்ராஞன் **तृतीयः** த்ருதீய: மூன்றாவது **पादः** பாத$_3$: பாதம்.

எந்த நிலையில் இருக்கும்போது ஒருவன் தன்னை அறியாதவனாக இருக்கிறானோ, எந்தப் பொருளையும் ஆசைப் படுவதில்லையோ, எந்தக் கனவையும் பார்ப்பதில்லையோ அது உறக்கநிலை. உறக்கநிலையை உடைய, ஒன்றாக இருக்கின்ற, விதவிதமான அறிவின்றி வெறும் அறிவின்

குவியலாக மட்டும் உள்ள, ஆனந்தமயமான, ஆனந்தத்தை அனுபவிக்கின்ற, விழிப்புக்கும் கனவுக்கும் வழியாக இருக்கின்ற ப்ராஞன் மூன்றாவது பாதம்.

**६. एष सर्वेश्वर एष सर्वज्ञ एषोऽन्तर्याम्येष योनिः सर्वस्य प्रभवाप्ययौ हि भूतानाम् ।।**

6. ஏஷ ஸர்வேச்$_1$வர ஏஷ ஸர்வஞ ஏஷோऽந்தர்யாம்யேஷ யோனி: ஸர்வஸ்ய ப்ரப$_4$வாப்யயௌ ஹி பூ$_4$தானாம் ।।

**एषः** ஏஷ: இவர் **सर्वेश्वरः** ஸர்வேச்$_1$வர: அனைத்தையும் ஆள்பவர். **एषः** ஏஷ: இவர் **सर्वज्ञः** ஸர்வஞ: அனைத்தையும் அறிபவர். **एषः** ஏஷ: இவர் **अन्तर्यामी** அந்தர்யாமீ (அனைத்திலும்) ஊடுருவி இருப்பவர். **एषः** ஏஷ: இவர் **सर्वस्य** ஸர்வஸ்ய அனைத்திற்கும் **योनिः** யோனி: உபாதான காரணம். **भूतानां हि** பூ$_4$தானாம் ஹி எல்லா உயிரினங்களுடைய **प्रभव-अप्ययौ** ப்ரப$_4$வ-அப்யயௌ தோற்றத்துக்கும் லயத்துக்கும் (இருப்பிடமாக இவரே இருக்கிறார்).

இவர் அனைத்தையும் ஆள்பவர். இவர் அனைத்தையும் அறிபவர். இவர் அனைத்திலும் ஊடுருவி இருப்பவர். இவர் அனைத்திற்கும் உபாதான காரணம். எல்லா உயிரினங் களுடைய தோற்றத்துக்கும் லயத்துக்கும் இருப்பிடமாக இவரே இருக்கிறார்.

**७. नान्तःप्रज्ञं न बहिष्प्रज्ञं नोभयतःप्रज्ञं न प्रज्ञानघनं न प्रज्ञं नाप्रज्ञम् । अदृष्टमव्यवहार्यमग्राह्यमलक्षणमचिन्त्यमव्यपदेश्य मेकात्मप्रत्ययसारं प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतं चतुर्थं मन्यन्ते स आत्मा स विज्ञेयः ।।**

7. நாந்த:ப்ரஞம் ந ப$_3$ஹிஷ்ப்ரஞம் நோப$_4$யத:ப்ரஞம் ந ப்ர ஞானக$_4$னம் ந ப்ரஞம் நாப்ரஞம் । அத்$_3$ருஷ்டமவ்யவஹார்ய மக்$_3$ராஹ்யமலக்ஷணமசிந்த்யமவ்யபதே$_3$ச்$_1$யமேகாத்மப்ரத்யய

ஸாரம் ப்ரபஞ்சோபச$_1$மம் சா$_1$ந்தம் சி$_1$வமத்$_3$வைதம் சதுர்த$_2$ம்
மன்யந்தே ஸ ஆத்மா ஸ விஞ்ஞேய: ||

**न बहिष्प्रज्ञं** ந ப$_3$ஹிஷ்ப்ரஞ்ஞம் (துரீயன்) வெளி விஷயங்களை அறிபவன் அல்ல. **न अन्तःप्रज्ञं** ந அந்த:ப்ரஞ்ஞம் உள் விஷயங்களை அறிபவன் அல்ல. **न उभयतःप्रज्ञं** ந உப$_4$யத:ப்ரஞ்ஞம் இடைப்பட்ட நிலையில் இருப்பவன் அல்ல. **न प्रज्ञानघनं** ந ப்ரஞ்ஞானக$_4$னம் மொத்தமாக உள்ள சாமான்ய அறிவும் அல்ல. **न प्रज्ञं** ந ப்ரஞ்ஞம் அனைத்தையும் சேர்ந்து அறிபவன் அல்ல. **न अप्रज्ञं** ந அப்ரஞ்ஞம் ஜடமும் அல்ல. **अदृष्टं** அத்$_3$ருஷ்டம் (ஞானேந்த்ரியங்களினால்) அறியப்படாதது. **अव्यवहार्यं** அவ்யவஹார்யம் செயல்களுக்குள் வராதது. **अग्राह्यं** அக்$_3$ராஹ்யம் (கர்மேந்த்ரியங்களால்) க்ரஹிக்கப்படாதது. **अलक्षणं** அலக்ஷணம் யூகத்திற்கு அப்பாற்பட்டது. **अचिन्त्यं** அசிந்த்யம் சிந்தனைக்கு எட்டாதது. **अव्यपदेश्यं** அவ்யபதே$_3$ச்$_1$யம் வாக்கால் விளக்க முடியாதது. **एक -आत्म-प्रत्यय-सारं** ஏக-ஆத்ம- ப்ரத்யய-ஸாரம் நான் என்ற எண்ணத் தொடர்ச்சியினால் அறியப்படக் கூடியது. **प्रपञ्चोपशमं** ப்ரபஞ்சோபச$_1$மம் உலகமற்றது. **शान्तं** சா$_1$ந்தம் அமைதி ஸ்வரூபமானது. **शिवं** சி$_1$வம் மங்களரூபமானது. **अद्वैतं** அத்$_3$வைதம் இரண்டற்றது. **चतुर्थं** சதுர்த$_2$ம் நான்காவது (பாதத்தைப்போல்) **मन्यन्ते** மன்யந்தே கருதப்படுகிறது. **सः** ஸ: அதுவே **आत्मा** ஆத்மா ஆத்மா. **सः** ஸ: அதுவே **विज्ञेयः** விஞ்ஞேய: அறியத்தக்கது.

துரீயன் வெளி விஷயங்களை அறிபவன் அல்ல. உள் விஷயங்களை அறிபவன் அல்ல. இடைப்பட்ட நிலையில் இருப்பவன் அல்ல. மொத்தமாக உள்ள சாமான்ய அறிவும் அல்ல. அனைத்தையும் சேர்ந்து அறிபவன் அல்ல. ஜடமும் அல்ல. ஞானேந்த்ரியங்களினால் அறியப்படாதது. செயல்களுக்குள் வராதது. கர்மேந்த்ரியங்களினால் க்ரஹிக்கப்படாதது. யூகத்திற்கு அப்பாற்பட்டது. சிந்தனைக்கு எட்டாதது. வாக்கால் விளக்க முடியாதது. நான் என்ற எண்ணத் தொடர்ச்சியினால் அறியப்படக்கூடியது. உலகமற்றது. அமைதி ஸ்வரூபமனாது. மங்களரூபமானது. இரண்டற்றது. நான்காவது பாதத்தைப் போல் கருதப்படுகிறது. அதுவே ஆத்மா. அதுவே அறியத்தக்கது.

**८. सोऽयमात्माध्यक्षरमोङ्कारोऽधिमात्रं पादा मात्रा मात्राश्च पादा अकार उकारो मकार इति ।।**

8. ஸோऽயமாத்மாத்$_4$யக்ஷரமோங்காரோऽதி$_4$மாத்ரம் பாதா$_3$ மாத்ரா மாத்ராச்$_1$ச பாதா$_3$ அகார உகாரோ மகார இதி ।।

**सः अयं** ஸ: அயம் அந்த **आत्मा** ஆத்மா ஆத்மாவே **अध्यक्षरं** அத்$_4$யக்ஷரம் ஓர் எழுத்தாகவும் **अधिमात्रं** அதி$_4$மாத்ரம் தனித்தனி எழுத்தாகவும் இருக்கின்ற **ओङ्कारः** ஓங்கார: ஓங்காரம் ஆகும். **पादाः** பாதா$_3$: பாதங்களே **मात्राः** மாத்ரா: எழுத்துக்கள். **मात्राः च** மாத்ரா: ச எழுத்துக்களே **पादाः** பாதா$_3$: பாதங்கள். **अकारः** அகார: அகாரம் **उकारः** உகார: உகாரம் **मकारः** மகார: மகாரம் **इति** இதி என்பன (ஓங்காரத்தின் எழுத்துக்கள்).

அந்த ஆத்மாவே, ஓர் எழுத்தாகவும் தனித்தனி எழுத்தாகவும் இருக்கின்ற ஓங்காரம் ஆகும். பாதங்களே எழுத்துக்கள். எழுத்துக்களே பாதங்கள். அகாரம், உகாரம், மகாரம் என்பன ஓங்காரத்தின் எழுத்துக்கள்.

**९. जागरितस्थानो वैश्वानरोऽकारः प्रथमा मात्राप्तेरादिमत्त्वाद्वाप्नोति ह वै सर्वान्कामानादिश्च भवति य एवं वेद ।।**

9. ஜாக$_3$ரிதஸ்தா$_2$னோ வைச்$_1$வாநரோऽகார: ப்ரத$_2$மா மாத்ராப்தேராதி$_3$மத்த்வாத்$_3$வாப்னோதி ஹ வை ஸர்வான்காமானாதி$_3$ச்$_1$ச ப$_4$வதி ய ஏவம் வேத$_3$ ।।

**आप्तेः** ஆப்தே: வ்யாபித்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **आदिमत्त्वात् वा** ஆதி$_3$மத்த்வாத் வா முதலாக இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **जागरितस्थानः** ஜாக$_3$ரிதஸ்தா$_2$ன: விழிப்பு நிலையை உடைய **वैश्वानरः** வைச்$_1$வாநர: வைச்வாநரன் **अकारः** அகார: அகாரமான **प्रथमा** ப்ரத$_2$மா முதல் **मात्रा** மாத்ரா எழுத்து. **यः** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத$_3$ த்யானிக்கிறானோ **सर्वान् कामान् ह वै**

ஸர்வான் காமான் ஹ வை (அவன்) அனைத்துப் பொருள்களையும் **आप्नोति** ஆப்னோதி அடைகிறான். **आदिः च** ஆதி$_3$: ச முதன்மையான வனாகவும் **भवति** ப$_4$வதி ஆகிறான்.

வ்யாபித்தல் என்ற ஒற்றுமையாலும் முதலாக இருத்தல் என்ற ஒற்றுமையாலும், விழிப்பு நிலையை உடைய வைச்வாநரன் அகாரமான முதல் எழுத்து. யார் இவ்விதம் த்யானிக்கிறானோ, அவன் அனைத்துப் பொருள்களையும் அடைகிறான். முதன்மை யானவனாகவும் ஆகிறான்.

**१०. स्वप्नस्थानस्तैजस उकारो द्वितीया मात्रोत्कर्षादुभयत्वाद्वोत्कर्षति ह वै ज्ञानसन्ततिं समानश्च भवति नास्याब्रह्मवित्कुले भवति य एवं वेद ॥**

10. ஸ்வப்னஸ்தா$_2$னஸ்தைஜஸ உகாரோ த்$_3$விதீயா மாத்ரோத்கர்ஷாது$_3$ப$_4$யத்வாத்$_3$வோத்கர்ஷதி ஹ வை ஞானஸந்ததிம் ஸமானச்$_1$ச ப$_4$வதி நாஸ்யாப்$_3$ரஹ்மவித்குலே ப$_4$வதி ய ஏவம் வேத$_3$ ॥

**उत्कर्षात्** உத்கர்ஷாத் மேலாக இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **उभयत्वात् वा** உப$_4$யத்வாத் வா இடையில் இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **स्वप्नस्थानः** ஸ்வப்னஸ்தா$_2$னः கனவு நிலையை உடைய **तैजसः** தைஜஸः தைஜஸன் **उकारः** உகாரः உகாரமான **द्वितीया** த்$_3$விதீயா இரண்டாவது **मात्रा** மாத்ரா எழுத்து. **यः** யः யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத$_3$ த்யானிக்கிறானோ (அவன்) **ज्ञानसन्ततिं ह वै** ஞானஸந்ததிம் ஹ வை ஞானத்தின் பாரம்பர்யத்தை **उत्कर्षति** உத்கர்ஷதி வளர்க்கிறான். **समानः च** ஸமானः ச (அனைவரிடமும்) ஸமமாகவும் **भवति** ப$_4$வதி இருக்கிறான். **अस्य** அஸ்ய அவனுடைய **कुले** குலே குலத்தில் **अब्रह्मवित्** அப்$_3$ரஹ்மவித் ப்ரஹ்மனை அறியாதவர் **न भवति** ந ப$_4$வதி இருக்கமாட்டார்.

மேலாக இருத்தல் என்ற ஒற்றுமையாலும் இடையில் இருத்தல் என்ற ஒற்றுமையாலும், கனவு நிலையை உடைய தைஜஸன் உகாரமான இரண்டாவது எழுத்து. யார் இவ்விதம் த்யானிக்கிறானோ, அவன் ஞானத்தின் பாரம்பர்யத்தை வளர்க்கிறான். அனைவரிடமும் ஸமமாகவும் இருக்கிறான். அவனுடைய குலத்தில் ப்ரஹ்மனை அறியாதவர் இருக்க மாட்டார்.

**११. सुषुप्तस्थानः प्राज्ञो मकारस्तृतीया मात्रा मितेरपीतेर्वा मिनोति ह वा इदँसर्वमपीतिश्च भवति य एवं वेद ।।**

11. ஸுஷுப்தஸ்தா$_2$ன: ப்ராஜ்ஞோ மகாரஸ்த்ருதீயா மாத்ரா மிதே ரபீதேர்வா மினோதி ஹ வா இத$_3$ம்ஸர்வமபீதிச்$_1$ச ப$_4$வதி ய ஏவம் வேத$_3$ ।।

**मितेः** மிதே: அளத்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **अपीतेः वा** அபீதே: வா ஒடுக்கத்தின் இருப்பிடமாக இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **सुषुप्तस्थानः** ஸுஷுப்தஸ்தா$_2$ன: உறக்கநிலையை உடைய **प्राज्ञः** ப்ராஜ்ஞ: ப்ராஜ்ஞன் **मकारः** மகார: மகாரமான **तृतीया** த்ருதீயா மூன்றாவது **मात्रा** மாத்ரா எழுத்து. **यः** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத$_3$ த்யானிக்கிறானோ (அவன்) **इदं सर्वं ह वै** இத$_3$ம் ஸர்வம் ஹ வை இவை அனைத்தையும் **मिनोति** மினோதி சரியாகப் புரிந்து கொள்வான். **अपीतिः च** அபீதி: ச ஒடுக்கத்தின் இருப்பிடமாகவும் **भवति** ப$_4$வதி ஆகிறான்.

அளத்தல் என்ற ஒற்றுமையாலும் ஒடுக்கத்தின் இருப் பிடமாக இருத்தல் என்ற ஒற்றுமையாலும், உறக்கநிலையை உடைய ப்ராஜ்ஞன் மகாரமான மூன்றாவது எழுத்து. யார் இவ்விதம் த்யானிக்கிறானோ, அவன் இவை அனைத்தையும் சரியாகப் புரிந்து கொள்வான். ஒடுக்கத்தின் இருப்பிடமாகவும் ஆகிறான்.

१२. अमात्रष्टातुर्थोऽव्यवहार्यः प्रपञ्चोपशमः शिवोऽद्वैत एवमोटार आत्मैव संविशत्यात्मनात्मानं य एवं वेद ॥

12. அமாத்ரச்$_1$சதுர்தோ$_2$ऽவ்யவஹார்ய: ப்ரபஞ்சோபச$_1$ம: சி$_1$வோ ऽத்$_3$வைத ஏவமோங்கார ஆத்மைவ ஸம்விச$_1$த்யாத்மனாத் மானம் ய ஏவம் வேத$_3$ ॥

**चतुर्थः** சதுர்த$_2$: துரீயன் **अमात्रः** அமாத்ர: சப்தமற்றவன். **अव्यवहार्यः** அவ்யவஹார்ய: செயல்களுக்கு அப்பாற்பட்டவன். **प्रपञ्चोपशमः** ப்ரபஞ்சோபச$_1$ம: உலகமற்றவன். **शिवः** சி$_1$வ: மங்களமானவன். **अद्वैतः** அத்$_3$வைத: இரண்டற்றவன். **एवं** ஏவம் இவ்விதம் **ओटारः** ஓங்கார: ஓங்காரம் **आत्मा एव** ஆத்மா ஏவ ஆத்மாதான். **यः** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத$_3$ அறிகிறானோ (அவன்) **आत्मना** ஆத்மனா தன்னால் **आत्मानं** ஆத்மானம் தன்னை **संविशति** ஸம்விச$_1$தி அடைகிறான்.

துரீயன் சப்தமற்றவன். செயல்களுக்கு அப்பாற்பட்டவன். உலகமற்றவன். மங்களமானவன். இரண்டற்றவன். இவ்விதம் ஓங்காரம் ஆத்மாதான். யார் இவ்விதம் அறிகிறானோ, அவன் தன்னால் தன்னை அடைகிறான்.

॥ माण्डूक्योपनिषत् समाप्ता ॥

மாண்டூக்யோபநிஷத் முடிவுற்றது.

*******